சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ரு.] 1916ஸு ஜூலைமீ [பகுதி எ.

## தைத்திரீயோபநிஷத்து.

### ஆனந்தவல்லி*

முதலநுவாகம்.

சிஷ்யன் குருவாகிய வெங்களிருவரையும் பிரமம் இரட்சிக்கட்டும். வித்தையால் ஏற்படக்கூடிய சாமர்த்தியம் எங்களுக்கு இருக்கட்டும். நாங்கள் துவேஷிக்கும்படியான சந்தர்ப்பம் நேரிடவேண்டாம்.

பிரமம் அறியத்தக்கது. இப்பிரமாண வாக்கியத்தால் சத்தியம் ஞானம் அநந்தம் பிரமமெனரிக்கு வேதம் கூறுகின்றது.

---

*இவ்வானந்த வல்லியைப்பிரம்ம வல்லியெனப் பாஷ்யகாரர்கள் தங்கள் வியாக்கியானங்களில் குறித்திருக்கின்றனர்.

எந்தப் புருஷன் குகையென்னும் சிரேஷ்டமான ஆகாயத்தில் மறைந்திருக்கிறதை யறிகிருனே அவன் சமஸ்தமான இச்சைகளையும் ஏகோகாலத்தில் ஸர்வஞ்ஞமான பிரமமாகவிருந்து அடைகிறுன்.

அந்த ஆத்மாவிலின்றும் ஆகாயமும், ஆகாயத்தினின்றும் வாயுவும், வாயுவினின்றும் அக்கினியும், அக்கினியினின்றும் ஜலமும், ஜலத்தினின்றும் பூமியும், பூமியினின்றும் ஔஷதிகளும், ஔஷதிகளினின்றும் அன்னமும், அன்னத்தினின்றும் புருஷனும் உண்டாயின.

அந்தப் பிரசித்தமான இப்புருஷன் (தேகம்) அன்னரசத்தாலுண்டானவன், இதுவேயவனுடைய சிரசு, இது வலது இரக்கை (வலதுகை) இது இடது இரக்கை (இடதுகை), இது ஆத்துமா (மத்தியபாகம்), இது ஆதாரமானவால் (கால்)

## அநுவாகம். உ.

எவை எவை பிருதிவியை ஆசிரயித்திருக்கின்றனவோ அந்தப் பிரஜைகள் அன்னத்தினின்று முண்டாகின்றன, பிறகு அன்னத்தினுலேயே ஜீவிக்கின்றன, பிறகு இதையே முடிவில் அடைகின்றன. அன்னமானதே பிராணிகளுக்கு முன்னமேயுண்டாயிற்று, ஆகலின் சகலத்திற்கும் ஔஷதமாகச் சொல்லப்படுகிறது, எவர்கள் அன்னத்தைப் பிரமமாக வுபாசிக்கிறுர்களோ அவர்கள் சமஸ்தமான அன்னத்தையடைகிறுர்கள், அன்னமானது பிராணிகளுக்கு முதலிலுண்டானதாக விருக்கிறது, ஆகலின் சகலத்திற்கும் ஔஷதமென்று சொல்லப்படுகிறது. அன்னத்தினின்றும் பிராணிகள் உண்டாகின்றன, உண்டானவைகள் அன்னத்தால் விர்த்தியாகின்றன, அன்னம் பட்சிக்கப்படுகிறது பிராணிகளைப் பட்சிக்கிறது, ஆகலான் அன்னமென்று சொல்லப்படுகின்றது.

அன்னவிகாரமான பிண்டத்தைவிடவே றுனதுள்ளேயிருக்கிறது. பிராணவிகாரமான ஆத்மா இப்பிராணமய ஆத்மாவால் அன்னமயம் நிறைந்திருக்கிறது.

இந்தப் புருஷாகாரமே அந்தவன்னமயத்தின் புருஷாகாரத்தை அனுசரித்து இவன் புருஷாகாரமாயிருக்கிறன், அவனுக்குப் பிராணனே தலை, வியானன் வலதுகை, அபானன் இடதுகை, ஆகாசம் ஆத்துமா, பிருதிவி வால்.

அநுவாகம். ௩.

தேவதைகளும் மனிதர்களும் மிருகங்களும் எவர்களோ அவர்கள் பிராணனை யனுசரித்து ஜீவிக்கிறார்கள், பிராணன் பிராணிகள் ஆயுள் நிச்சயம் ஆகையால் சகலத்திற்குமாயுள் சொல்லப்படுகிறது. எவர்கள் பிராணனைப் பிரமமாக உபாசிக்கிறார்களோ அவர்கள் சர்வ ஆயுளையே அடைகிறார்கள், பிராணன் பூதங்களின் ஆயுள் நிச்சயம் ஆகலின் சர்வாயுள் சொல்லப்படுகிறது.

முன்னம் சொன்னதற்கு இவனே சரீரசம்பந்தமுள்ள ஆத்துமா. பிராணனாலுண்டான இதைவிட வேறாயுள்ள மனத்தாலுண்டான ஆத்மாவிருக்கிறன். அவனாலிவனிறைந்திருக்கிறன்.

புருஷாகாரனே அவனுடைய புருஷாகாரத்தை அனுசரித்து இவன் புருஷாகாரமானவன், அவனுக்கு யஜுஸே சிரசு, ரிக்கு வலதுகை, ஸாமம் இடதுகை, விதிவாக்கியம் ஆத்துமா, அதர்வாங்கிகள் வால்ஆதாரம்.

மணவழகு.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பழஞ்சரித்திரச் சுருக்கம்.

இங்கே பழைமையென்பது இயன்றவரையில் நாகரீகமான காலத்தைக் குறிப்பதாகும்.

## இடம்.

பூர்வீகமக்கள் முதல்முதல் வெப்பமிகுந்த நாட்டில், மூங்கிலடர்ந்த குறிஞ்சி நிலத்தில்தான் நெடிதுகாலம் வசித்துக்கொண் டிருந்தார்கள். இந்நாடு சூரியனது மையவரிக்கு உட்பட்ட இடமாகும். பிறப்புண்டாவதற்கு வெப்பம் இன்றியமையாதது.

மொழிநூல் பாயிரவியல் 66-ம் பக்கம் குறிஞ்சி பார்க்க.

அக்காலத்தில் மழையும் பனியும் குளிரும் மிகுதியானபடியால், அக்காலவியற்கைக்கு மிகுவெயில் ஓர் செல்வமாயிற்று. சூரியனது காட்சி மற்றோர் செல்வமாயிற்று. குறிஞ்சிநிலம் மேடானதால் இவ்விருவகைச் செல்வமும் அதிலேயே சிறப்புடையன வாகும்.

இக்காரணங்களால் பூர்வீகமக்கள் சூரியனிடத்தில் விருப்பம் வைத்து மரியாதைபாராட்டி வந்தார்கள். இம்மரியாதையிலிருந்து தான் அவனுக்கு வணக்க முண்டாயது.

குறிஞ்சியில் இயல்பாய் மூங்கில் எரிந்து கொண்டிருந்ததனால், மூங்கினெருப்பைத்தான் முதல் முதல் அறிந்தார்கள். சிகிமுகிக்கல் முதலியன பிறகு உண்டாயின. குறிஞ்சியிலிருந்த பூர்வீகமக்கள் கருநிறமுள்ளவர்கள், கோபமிகுந்தவர்கள், மிகநெடியர், சூரர், போரில் விருப்பமுள்ளவர்கள், சுணங்கனென்னும் நாயைத்துணைக் கொண்டவர்கள். விலங்குவகைகளில் மக்களிடத்தில் முதல் முதல் நாய்தான் தானகவந்து சேர்ந்திருக்கவேண்

டும். நாயேனென்னும் வழக்குத் தென்னாட்டில் தான் இருந்து கொண்டிருக்கின்றது.

## உணவு முதலியன.

பாலே அனுபவ உண்வாதலால் முதல் முதல் பாலும் பழமும் பிறகு மூங்கிலரிசியுமே பூர்வீகமக்களுக்கு உணவுப்பொருளாயின. மலைநெல், சோளம், கம்பு, தினை முதலியன பிறகுண்டாய உணவுப் பொருள்களாம். இம்மலைநெல்லே யவம் என்னும் தானியமாகும். மூங்கிற் குழாய்களே எல்லாப்பாத்திரங்களுமாயின. தானிய அளவுக்குரிய முகத்தலளவைதான் முதல் முதலுண்டாயது. முகத்தலளவைக்கருவிகளும் மூங்கிற்குழாய்களே. வீணைமுதலிய வாச்சியங்களும் மூங்கிலால் தான் முதல் முதல் செய்யப் பட்டன. கட்டில் பாய் சீப்பு தெப்பம் தண்ணீர்க்குழாய் முதலியனவும் மூங்கில்களே. மூங்கில் மடல்களைப்பதம் செய்து வருணங்களினால் எழுதி வந்தார்கள் எழுதுதற்கருவி மயிலிறகு.

இங்ஙனம் பூர்வீகமக்களுக்குச் சூரியனும் மூங்கிலுமே சிறந்த செல்வமாயிருந்தன. அவர்கள் நாகரீகமில்லாதகாலத்தில் பேசிக்கொண்டிருந்த இயற்கை யொலிக்குறிமொழியின் வழியாய் உண்டாக்கப்பட்ட வழிமொழிக்கும் சூரியனும் மூங்கிலுமே ஆதாரமாகின்றன. வழிமொழியின் நடையும் அங்ஙனமே அமைந்திருக்கின்றது. மொழிநூற்றிறவுகோல் காண்க.

## வழி.

எங்கும் மூங்கிலடைந்திருந்தபடியாலும், வழி உண்டாக்குவதற்குக் கத்திமுதலிய ஆயுதங்களில்லாத காலமாதலாலும், மூங்கில் இயல்பாய் இருந்து எரிந்து தணிந்துபோன இடமே வழியாகக்கொண்டு பூர்வீகமக்கள் ஓர் குறிஞ்சியிலிருந்து மற்றோர் குறிஞ்சிக்குப் போயிருக்கின்றார்கள் இதுதான் முதல்வழி.

## நெய்தல்.

குறிஞ்சிபோல் மேடானதாய் வெயில்படும்படியான இடமாய்ச் சூரியனது காட்சிக்கு மிகுஅழகியதாய் இருக்கின்றபடியால், பிறகு அவ்வழியாகவே நெய்தனிலத்தில் குடியேறினார்கள். மூங்கிற்புதர் முதலியன உயர்ந்து அடர்ந்திருந்தபடியால் வழியில்லாமையாலும் சூரியனது காட்சி

தெரியாதபடி இருண்டிருந்தபடியாலும் மழைமிகுதியால் எங்கும் கசிவும் ஈரமுமாயிருந்தபடியாலும் குறிஞ்சியிலிருந்தவர்கள் அப்பொழுது முல்லையிலிறங்கிக் குடியேருமல் போனார்கள். இக்காரணங்களால் நெய்தனிலத்திலேயே நெடிது காலம் வசித்துக் கொண்டுவந்தார்கள்.

குறிஞ்சி நிலமக்கள் இரவில் மூங்கில் எரிவதாலுண்டாய ஒளியால் மகிழ்வதுபோல நெய்தனிலமக்கள் இரவில் சந்திரனொளியால் மகிழ்ந்து கொண்டு வந்தார்கள். நெய்தல் மணல் நிலமாதலால் மூங்கில் இல்லை.

நெய்தல் மணல் நிலமாதலாலும் வேனிற்பருவத்தில் நிலாவெளிச்சத்தில் அதுமிக இனிதாதலாலும் விளையாட்டென்பது முதல் முதல் நெய்தலில் தான் உண்டாயது.

## வர்த்தகம்.

குறிஞ்சியில் மூங்கிலரிசி முதலியன இயற்கைவிளை பொருளாதலாலும், நெய்தலில் உப்பொன்றே இயற்கை விளைபொருளாதலாலும், நெய்தனிலமக்களுக்கு மூங்கிலரிசி முதலியனவும் குறிஞ்சி நிலமக்களுக்கு உப்பும் அவசியம் வேண்டும்படியான காலம் வந்தபடியால், பண்டமாற்றென்னும் வர்த்தகந்தான் முதல் முதலுண்டாயது.

## போர்.

குறிஞ்சி நிலமக்களுக்கும் நெய்தனிலமக்களுக்கும் பண்டமாற்றுக் காரணமாகப் பகையுண்டானபடியால், இவ்விருவர்க்கும் போருண்டாயது. இடமுதலிய வலிவு பெற்றிருந்ததனால் குறிஞ்சி நிலமக்களே வென்றனர்.

## அரசாட்சி.

உயிர்கள் வளர்வதற்கேற்ற வெப்பமுதலியன தென்றிசையில் மிகுந்திருந்தபடியால் அரசாட்சியென்பது முதல் தென்றிசையில் குறிஞ்சிநிலத்தில் தான் உண்டாயது.

கோட்டைமாளிகை சிறைச்சாலை பள்ளிக்கூடம் கோயில் முதலியன குறிஞ்சிநிலத்தில் தான் முதல் முதல் கட்டப்பட்டன. குகையில் தான் மந்திராலோசனை நடந்தது. களஞ்சியமுதலியனவும் அதிலேயே யிருந்தன.

குறிஞ்சி நிலமக்கள் நெய்தனிலமக்களை வென்று அரசுபெற்றபடியால் துறைமுகச் சுதந்தரம் பெற்றுச் சுங்கத்தீர்வை வாங்கிவந்தார்கள். முதல்

முதல்தான் உப்புதான் சுங்கத்தீர்வையாயிருந்தது. நெய்தனில மக்கள்தான் கப்பல் யாத்திரையிற் சிறந்தவரானார்கள். கடல்யாத்திரைதான் முதல் முதலுண்டாயது.

## முல்லை.

சிறிது மழைவளம் குறைந்தபடியாலும், இடமில்லாமையாலும், குறிஞ்சியிலிருந்தவர்களும் நெய்தலில் இருந்தவர்களும் மெல்லமெல்ல முல்லையிலும் குடியேறத்தொடங்கினார்கள். முல்லையிற் குடியேறின பிறகு தான் அங்கே தூம்புகளுண்டாயின. தூம்பு=நுழைவழி நெறிமுதலிய வழிகள். மூங்கிற்காட்டில் மூங்கில் எரிந்ததனாலுண்டாய வழிகளாம். தூம்பு முதலியன மூங்கிலொழிந்த மற்றைய காட்டினுள்ளே உண்டான வழிகளாம். இவ்வழிகளெல்லாம் ஆயுதங்களின்றி இயல்பாயுண்டாயின வாகும்.

## மருதம்.

பிறகு முல்லையின் திருத்தம் மருதமாயிற்று. இது செயற்கை நிலம். அதாவது பிறகு உண்டாக்கப்பட்டது. குறிஞ்சி நெய்தல் முல்லை இம்மூன்றும் இயற்கை நிலம். ஆகநிலம் நான்கு ஆதலால் நானிலமென்பர். இம் மருதநிலம் வரவர உயர்ந்து நாகரீகம் அடையத்தலைப்பட்டது. அரசாட்சியும் உண்டாயது. அக்காலவியற்கைக்குக் கப்பல் வர்த்தகமே ஏற்றதாயிருந்தபடியாலும், மருதநிலத்து அரசனுக்குத் துறைமுகச் சுதந்தரமில்லாதபடியாலும், அது காரணமாக மருதநிலத்து அரசனுக்கும் குறிஞ்சி நிலத்தரசன் நெய்தனிலத்தரசனாகிய இருவர்க்கும் போருண்டாயது.

குறிஞ்சியும் நெய்தலும் உயர்ந்த இடமாதலால் மருதநிலத்தரசன் பலமுறையும் தோல்வியடைந்தான். மருதத்தரசனுக்கு உயர்ந்த இடமில்லாதபடியால் அப்பொழுதுதான் போர் நிமித்தம் தேர் உண்டாக்கப்பட்டது. மருதநிலத்தரசன் தேர்ப்படை முதலியன மிகுதியாக்கவே குறிஞ்சி நிலத்தரசன் யானைப்படை முதலியனவும் மிகுதியாக்கினான். இருபெரு வேந்தர்க்கும் படைமிகுதிப்பட்டபடியால் பலமுறையும் போர் நடந்து கொண்டேயிருந்தது. கடைசியிற் சமாதானமாய்ச் சம்பந்தமும் செய்து வரலாயினர். சமாதானமான காலத்தில் குறிஞ்சி நிலத்தரசரும் தம் நிலத்திற்குச் சார்பான மருதத்தை உட்படுத்திக்கொண்டிருக்க வேண்டும். இவ்

விரு பெருவேந்தர்க்கும் நெய்தனிலத்தரசன் முதலோர் உட்பட்டவராயி ஞர்.

ஆயின் வரவரப்பிற்காலத்துச் செயற்கை நிலமாகிய மருதமானது இயற்கை நிலமாகிய குறிஞ்சிநிலத்து உதவியாலும், முல்லை நிலத்து உதவி யாலும் பலவகையிலும் உயர்ச்சிப்பெற்று என்றும் கப்பல் வர்த்தக முத லியவற்ருலும் சிறந்திருந்ததென்பது பெறப்படுகின்றது. இம்மருத நிலத்து இருந்தவர்கள்தாம் பிறகு பிரிந்து ஆரியராயினர். இதற்குச் சிறந்த காரணங்களும் மேற்கோள்களும் உள்ளன.

குறிஞ்சி நிலத்து அரசர்களுக்கு யானைப்படையும், மருதநிலத்து அர சர்களுக்குத் தேர்ப்படையும் சிறந்தனவாதலால், நால்வகைப் படைகளைக் கூறுமிடத்துக் குறிஞ்சிநிலத்து அரசர் யானையை முற்கூறுவர். மருத நிலத்து அரசர் தேரினை முற்கூறுவர்.

கசரததுரகபதாதி குறிஞ்சிவழக்கு.
ரதகசதுரகபதாதி மருதவழக்கு.

தேர் போர் நிமித்தம் உண்டாக்கப்பட்டதாதலால் இரதோச்சவம் சங்காரகிர்த்திய மென்பர்.

ஆரியகுச்சரி யென்பது மருதயாழ்த்திறன் வகையுள் ஒன்ருயிருத்த லால் ஆரியர் பூர்வம் மருதநிலமக்களென்பதே துணிவு.

தமிழ்க்குச்சரி குறிஞ்சியாழ்த்திறன் வகையுள் ஒன்று.

## பாலை.

பாலையென்பது நால்வகை நிலத்துக்கும் பொதுவாய் இருந்தது. கடலொதுக்கமுண்டான பிறகு அதற்கு நிலமுண்டாயிற்று. பாலை நெய் தல்போல மணல் நிலமாதலால் நெய்தலிலிருந்தவர்கள் தாம் பாலையிற் குடியேறினர்கள். பூர்வீகமக்கள் நெய்தலிற் குடியேறிய பிறகும் அம்பு முதலியன உண்டான பிறகும் தான் புலாலுண்ணும் வழக்குண்டாயது. மருத்துவநூலும் தத்துவநூலும் பெருகின பிறகு புலால் மறுப்புண் டாயது.

மாகறல்-கார்த்திகேய முதலியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஆன்மாவுக்குச் சிற்றறிவு எதனால் அறிவது.

வியாபகமான ஆன்மா ஆணவமலத்தால் மறைக்கப்பட்டு அறிவு விளங்காது இருளிலகப்பட்டு விழித்த கண்போல விருக்கும் இந்தநிலை கேவலமாம். அதன்பின்பு ஆன்மா முன்செய்த நல்வினை தீவினைக்கேற்ற பயனை அநுபவிக்கும்படி கடவுள் தநுகரணபுவன போகங்களைக் கொடுப்பர் அவற்றொடு கூடியிருக்கும் நிலைக்களம் இந்தச்சகலத்தில் ஆன்மாசீவனா யிருக்கிறான் கடவுள் மாயா தநுகரணங்களைக்கொண்டு ஆன்மாவினது அறிவை ஏகதேசமாக விளக்கி இருவினைப்பயனாகிய சுக துக்கங்களை ஊட்டுகின்றார்.

அப்பொழுது பதியாகிய கடவுளுடைய இச்சா ஞானக்கிரியாசத்திகள் பிரம்மா விஷ்ணு ருத்திரன் மகேசுரன் சதாசிவன் என்னும் பஞ்சமூர்த்திகளை அதிட்டிக்க, அம்மூர்த்திகளுள்ளே பிரமாவியஷ்டிரூப பஞ்சாக்கரமைந்தில் பிரமன் அகாரத்தைச்செலுத்துவர், விஷ்ணு உகாரத்தைச் செலுத்துவர், உருத்திரன் மகாரத்தைச்செலுத்துவர், மகேசுரன் விந்துவைச்செலுத்துவர், சதாசிவன் நாதத்தைச்செலுத்துவர், இப்படிச்சூக்கும பஞ்சாக்கரங்களாகிய அவற்றை அந்தப் பஞ்சமூர்த்திகள் செலுத்தியபொழுது அந்த எழுத்துகளுள் அகாரம் மனத்தைச் செலுத்தும், உகாரம் புத்தியைச் செலுத்தும், மகாரம் அகங்காரத்தைச் செலுத்தும், விந்து சத்தத்தைச்

செலுத்தும், நாதம் உள்ளத்தைச் செலுத்தும், உள்ளமானது காலம் நியதி கலை வித்தை அராகம் என்னும் ஐந்து தத்துவங்களும் கூடிய கூட்டமாகிய புருடதத்துவமாம்.

இனி அகார உகார மகார விந்து நாதங்களாகிய அக்கரமைந்தும் மனம் புத்தி அகங்காரம் சித்தம் உள்ளம் என்னும் கரணங்களைந்தனையுஞ் செலுத்தியபோது மனம்புறத்திலே இந்திரியவாயிலாகச்சென்று புறத்துள்ள விஷயங்களைக்கவரும். புறத்துள்ள விஷயங்களாவன சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் என்னும் ஐந்துமாம். அவற்றைக்கவர்தற்குக் கருவியாயுள்ள இந்திரியங்கள் காது, மெய், கண், வாய், மூக்கு என்னும் ஐந்துமாம்.

இவற்றுள் காது சத்தத்தை அறியுங்கருவியாயிருக்கும். மெய் பரிசத்தையறியுங் கருவியாயிருக்கும். கண் உருவத்தை அறியுங் கருவியாயிருக்கும், வாய் இரதத்தை அறியுங்கருவியாயிருக்கும். மூக்கு கந்தத்தை அறியுங் கருவியாயிருக்கும். இந்தச்சத்த பரிசரூப ரசகந்தமைந்தும் ஆகாசமுதலிய பூதங்களின் குணங்களாம் அவைகளே விடயங்கள் எனப்படுவன.

அவற்றுள், சத்தம் ஆகாசமுதலிய ஐந்தினும், பரிசம் வாயுமுதலிய நான்கிலும், உருவம் தேயுமுதலிய மூன்றினும் இரதம் நீரினும் பிருதிவியினும், கந்தம் பிருதிவியினுமிருக்கும். இந்தப்பூதகுணமாகிய விடயங்களை இந்திரியவாயிலாக மனம்பற்றும்.

அதாவது, மனம் செவியிந்திரியத்தோடு கூடிநின்று ஆகாசமுதலிய ஐந்தினுமுள்ள சத்தத்தை யறியும், மெய்யிந்திரியத்தோடு கூடிநின்று வாயுமுதலிய நான்கினுமுள்ள பரிசத்தையறியும், கண்ணிந்திரியத்தோடு கூடிநின்று தேயுமுதலிய மூன்றினுமுள்ள உருவத்தை யறியும், வாயிந்திரியத்தோடு கூடிநின்று நீரினும் பிருதிவியினுமுள்ள சுவையையறியும், மூக்கிந்திரியத்தோடு கூடிநின்று பிருதிவியிலுள்ள கந்தத்தையறியும், மனம் இவ்வாறு இந்திரிய வாயிலாகப் பற்றியவிடங்களைச் சித்தம் சிந்திக்கும். அகங்காரம் கொண்டெழும், உள்ளம் அவற்றையறியும்.

புத்தியின் வாயிலாக உள்ளம் அறியும்போது அவை சுகமும் துக்கமுமாக வேறுபட்டுத் தோன்றும் அவ்வேறுபாட்டுக்குக்காரணம் முக்குணங்களின் செயல்களாம். அதாவது, முக்குணங்களில் சத்துவகுணம் விடயங்களைச் சுகமாக்கிக் காட்டும். தாமதகுணம் விடயங்களைத் துன்பமாக்கிக்காட்டும். புருடன் அக்குணசொரூபியாய் நின்று சுகத்துக்கங்களை நுகர்வன், இச்சுகதுக்காநுபவம் வினைவசத்தால் விளைவது, நல்வினைப்பயன் சுகமாகவரும் தீவினைப்பயன் துன்பமாகவரும், விடயங்களில் வேறுபாடில்லை யாயினும் வினைவசத்தால் முக்குணங்கள் அவற்றை வேறுபடுத்திக் காட்டும். வேறுபாடாக அவற்றையுணர்தலே இன்ப துன்பாநுபவமாம் இவ்வறிவு நிகழ்ச்சியே சிற்றறிவின் விளக்கம் இவ்வறிவு ஏகதேசமாக நிகழ்வதால், சிற்றறிவெனப்படும். வினை பக்குவமாகிய அநுபவத்துக்கு வரும்போது கடவுள் தமது சத்தியினால் ஆன்மாவைச் சகலப்படுத்தி உண்பிப்பர் பக்குவவினையில்லாதபோது கேவலப்படுத்துவர் கேவலப்படுதல் உறங்குதலும் சகலப்படுதல் விழித்தலுமாம் இவையிரண்டும் வினைக்கேற்ப நிகழ்வனவாம்.

ஆன்மாவும் தநுகரண புவனபோகங்களும் வேறு வேறுபொருள்களாயினும், ஆன்மா மலமயக்கத்தால் தானும் அவையும் ஒன்றெனவேறுபாடின்றிக் காண்பதால் அவற்றின் குணங்களையெல்லாந் தன்னுடையதாகவும் அவற்றின் விளைவுகளையெல்லாம் தன்விளைவுகளாகவும் கருதும் விபரீதஞானமெனப்படும் இந்த விபரீதஞானத்தை விளைப்பது ஆணவமலமேயாம்.

இதனால் வியாபகத்தையுடைய ஆன்மாக்களுக்குச் சிற்றறிவு ஆணவமலசம்பந்தத்தாலே வந்தது இவ்வாணவ மலமாகிய மூலமலவழுக்கைச் சிவபுண்ணியமாகிய புடத்தால் மெல்லமெல்லக் கழித்துப் பக்குவப்படுத்தி சத்திகெடும்படி செய்யின் பரிபக்குவமடைந்து தமக்கு அம்மலசம் பந்தத்தால் வந்த சிற்றறிவுகெட்டுப் பேரறிவாளனும் பரிபூரணராய சிவபிரான்றிருவருளெய்துவ ரென்பது பெறப்பட்டது.

சைவசூக்குமார்த்த போதினி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அப்பர் தேவாரத்தாற் கொள்ளக்கிடக்கும் கீரனார் யார்?

## சேந்தமிழ்

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்"

இது திருநாவுக்கரசர்வாக்கு. திருநாவுக்கரசரும் சம்பந்தரும் ஒரே காலத்தவ ரென்பதும், இருவரும் பெருநட்பின ரென்பதும் யாவருமறிந்த வுண்மை. திருநாவுக்கரசர் இத்திருவாக்கிற் சுட்டியது தருமிக்குப் பொற்கிழியளித்த சரித்திரம். தருமிக்குச் சிவபெருமான் கொடுத்தருளியபாடல் வருமாறு.

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி
காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ
பயிலியதுகெழீஇய நட்பின்மயிலியற்
செறியெயிற் றரிவைகூந்தலி
னறியவுமுளவோ நீயறியும்பூவே"

இச்செய்யுளைத் தருமிகொண்டுசென்று சம்பகப்பாண்டியனுக்குக்காட்டியபோது கீரனார் அதிற் குற்றம்பாரித்து அதற்குரிய பொற்கிழியைக் கொடுக்கவிடாது தடுத்தார். அதுகேட்டுச் சிவபெருமான் ஒருபுலவராய் வெளிப்பட்டு அப்பாடலினது தகுதியெடுத்துக் காட்டித் தருமிக்கு அப்பொற்கிழியை வழங்குமாறருளினார்.

தருமிக்குச் சிவபெருமான் பாடல் கொடுத்தருளியதும், அதிலே கீரனார் குற்றம்பாரித்துப் பொற்கிழி வழங்காது தடுத்ததும், அப்போது சிவ

பெருமான் ஒரு புலவராய்ச் சென்று சங்கமேறியதும், அப்பாடலின் தகுதியை நாட்டியதும், பொற்கிழி யுதவுமாறருளியது மாகிய பெருங்கருணைச் செய்திகளைத் திருநாவுக்கரசர் வியந்து தமது தேவாரத்தில் "பின்பாட்டுப் புலவனாய்" என்று எடுத்துப் பாடுவாராயினர்.

அற்றேல், கீரனார் மூன்றாஞ் சங்கமுடிவில் விளங்கியவரன்றோ. அவர் செய்தியை எடுத்துக்கூறிய திருநாவுக்கரசர் மூன்றாஞ் சங்கத்துக்குப் பிற்பட்டவராகற் பாலர். சம்பந்தர் திருநாவுக்கரசர் காலத்தவ ராதலின் அவரும் மூன்றாஞ் சங்கத்துக்குப் பின்னுள்ளவரே யாவர் என்பது சிலர் துணிபு.

இத்துணிபு நன்கு செய்யப்பட்டதாகத் தோன்றவில்லை. தருமி கொண்டுசென்ற பாடலிற் குற்றம் பாரித்தார் மூன்றாஞ் சங்கத்திறுதியிலிருந்த கீரனார் தாமா? அன்றி, அப்பெயருடைய மற்றொருவரா வென்பதும், கீரப்பெயருடையார் ஒருவரா பலராவென்பதும் அவர்தாம் எவ்வெக் காலத்திருந்தவ ரென்பதும் ஆராயப்படுதல் வேண்டும்.

திருவிளையாடற் புராணத்தின்படி, தருமிகொண்டு சென்ற 'கொங்குதேர் வாழ்க்கை' என்னுந் தெய்வப்பாடலிற் குற்றம் பாரித்தவர் கீரனார் என்னுமொரு புலவர். அவரே அகஸ்தியர்பால் இலக்கணங்கேட்டு விபரீதம் நீங்கப்பெற்றவர். அவர் சம்பக பாண்டியன் காலத்தில் விளங்கியவர் அவர்க்குக் கீரனார் என்னும் பெயரே பெருவழக்கு. நக்கீரனா ரென்னும் பெயரும் சிறு வரவினதாய்ப் பிற்காலத்து வழங்கிற்று.

அவர் காலத்துக்குப் பின்னர் கீரனார் என்னும் பெயர் கொண்டார் அநேகர். அவருட் குட்டுவன் கீரனார், தும்பிசேர்கீரனார், பொருந்திலிளங்கீரனார், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார், மதுரை நக்கீரனார், மோசிகீரனார் என்போர் சிறந்தோர்.

இவருள்ளே மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் இறையனாரகப் பொருளுக்கு உரைசெய்த விரகர். இவரே திருமுருகாற்றுப்படையும், நெடுநல் வாடையும் பாடியவர். இவர் உக்கிரப்பெருவழுதி காலத்தவர். மூன்றாஞ் சங்கத்திறுதிக் காலத்திருந்தவர்.

நெற்றிக்கண்ணைக் காட்டினாலுங் குற்றங்குற்றமே எனக்கூறி அஞ்சாது வாதாடிய கீரனாரும் வேறு, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனாரும் வேறு. முன்னையவர் இரண்டாஞ் சங்கத்துக்கடைக்கூற்றில் விளங்

கியவர். பின்னையவர் மூன்றாஞ் சங்கத்திறுதிக் காலத்திலே விளங்கியவர். இவரை அவராகவும், அவரை இவராகவுங்கொண்டு மயங்குவார் அநேகர். யானுஞ் சிறிதுகாலத்துக்கு முன் அவ்வாறுகொண்டு மயங்கினேன். ஆராய்ச்சியாற் பின்னர்த் தெளிந்தேன். அது நிற்க,

1. சம்பகபாண்டியன் முதல்

2. பிரதாப சூரியன் 3. வங்கிசத்துவசன் 4. இரிபுமர்த்தனன் 5. சோழவமிசாந்தகன் 6. சேரவமிசாந்தகன் 7. பாண்டிவமிசேசன் 8. வமிசசிரோமணி 9. பாண்டீச்சுரன் 10. குலத்துவசன் 11. வமிசபூடணன் 12. சோமசூடாமணி 13. ராஜசூடாமணி 14. பூபசூடாமணி 15. குலோபாண்டியன் 16. அரிமர்த்தனன், 17. சகநாதபாண்டியன், 18. வீரவாகு, 19. விக்கிரமவாகு, 20. பராக்கிரமவாகு, 21. சுரபிமாறன், 22. குங்கும பாண்டியன், 23. கர்ப்பூர பாண்டியன், 24. காருண்ணிய பாண்டியன், 25. புருடோத்தமன், 26. சத்துருசாதனன், 27. கூன் பாண்டியன் ஈறாக இருபத்தேழு பாண்டியர் வழிவழி யரசுபுரிந்தனர் என்பது திருவிளையாடற்புராணம்.

இறையனாரகப் பொருளுறைப்படி கூன்பாண்டியன் முதல் உக்கிரப் பெருவழுதியீறாக நாற்பத்தொன்பது பாண்டியருளர்.

உக்கிரப்பெருவழுதி காலத்தில் விளங்கியவராகிய மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்க்கும் முன்னைய கீரனார்க்குமிடையே எழுபத்தைந்து பாண்டியர் அரசு செய்து போயினர் என்பது வெளிப்படையா நின்றது. இறையனாரகப் பொருளுரைப்படி கூன்பாண்டியன் முதல் உக்கிரப்பெருவழுதி யீறாகச் சென்ற காலம் ஆயிரத் தொண்ணூற்றைம்பது வருடம். இக்கணிதப்படி சம்பகபாண்டியன் முதற் கூன்பாண்டிய னீறாகச் சென்ற காலம் (900) தொளாயிரம் வருடமாகும். ஆகவே முன்னைய கீரனார் பின்னைய கீரனாருக்கு 2750 வருடங்களுக்கு முன்னர் விளங்கினராகற் பாலர்.

ஆதலால் முன்னைய கீரனாரே அப்பர் தேவாரத்தாற் கொள்ளக் கிடப்பவரென்பது நன்கு துணியப்படும்.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை.

---

௨

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வேதாந்தமும் மாயாவாதமும்

வேதாந்தத்துக்கு மாயாவாதக் கொள்கை இன்றியமையாத தொன்றென்று கீழ்நாட்டிலும் மேனாட்டிலுமுள்ள தத்துவ சாத்திரிகள் கருதுகின்றார்கள். கேவலம் பரம்பொருளாகிய பிரமமே சத்தியமென்றும் மற்றையகண்டப் பொருள்களெல்லாம் மித்தையென்றுங் கூறுங் கேவலாத்துவித சாத்திரமே வேதாந்த சாத்திரமென்று நினைக்கப்பட்டுவருகின்றது. சித்துத் தன்மையோடுங் கூடிய கேவலமுழுமுதற் சத்துப்பொருளொன்றுண்டு. கண்டப்பொருள்களாகிய ஜீவான்மாக்களோடுங் கூடிய இப்பிரத்தியக்ஷானுபவ உலகமோ ஒருமித்தைப்பொருள். மானதக்காட்சிக்கும் புலனாகும் விடயங்களெல்லாம், கனவு காண்பானுக்குப் புலப்பட்டு அவன் விழித்தமாத்திரையானே சூன்யமாய் விடும் பொய்த்தோற்றங்கள் போல் உள்ளன. மாயையென்பது கண்டமாகிய உலகத்தின் மித்தைத் தன்மையை உணர்த்துவது. இம்மாயாவாதக் கொள்கையை ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள், கயிறும் அரவும், இந்திரசால வித்தைக்காரனும் சாலவித்தையும், பாலையும் பேய்த்தேரும், துயில்வோனும் கனவும் போன்ற உபமானங்களான் விளக்குகின்றார். இக்காலத்திலறியப்பட்ட வேதாந்தத்தின் முக்கிய கொள்கைகள் 'பிரமமே நித்தியம், பிரபஞ்சம் பொய், ஆத்மனே பிரமம். வேறன்று,' என்ற வாக்கியங்களில் சுருங்கப்பட்டிருக்கின்றன. மாயாவாதக் கொள்கை வேதாந்தத்துக்கு இன்றியமையாத தொன்றென்று இக்காலத்தில் கருதப்படினும், வேதாந்த சாத்திரத்துக்கும் மாயாவாதக் கொள்கைக்கும் உள்ள சம்பந்தத்தைக் குறித்துக் கீழ்நாட்டுப்பண்டிதர்கள் பலருக்கு அபிப்பிராயபேத முண்டு. ஸ்ரீமான்,

கௌ, பண்டிதர் கீல் டி யூசன், பண்டிதர் பிரபுடட்சாஸ்திரி ஆகிய இவர்கள் வேதாந்ததத்துவத்துக்கு மாயாவாதக்கொள்கை உரியதேயென் றறுதியிட்டிருக்கின்றார்கள். இந்தியாவின் ஆதிகாலத்து இருடிகளுக்கு முதல் முதற்றோன்றியது மாயாவாதக் கொள்கையேயென்று அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். "ஞாதருஞேயங்களின் துவிதபாவனையும், ஆன்மாக்களின் பன்மையும், அவற்றின் அனுபவாதிப் பொருள்கள் பலவும் அநித்தியமென்றுணர்த்தும் மாயாவாதம், ஆதி இந்தியரின் தத்துவ ஞானத்துக்கு உயிர்போன்றது," என்றார் ஸ்ரீமான். கௌ. (கௌ, 'உபநிடதங்களின் தத்துவம்' பக்கம். 237) ஆனால் மற்றொரு சாராராகிய ஸ்ரீமான். கோல்புருக்கும், பண்டிதர் தீபாவும் மாயாவாதக் கொள்கை பிற்காலத்திலுண்டாக்கப்பட்டு இடையே செருகப்பட்டதென்று நம்புகிறார்கள். "பல்வேறுவகைத்தான இவ்வுலகம் மித்தையென்றும், சாக்கிரத்தில் ஆன்மாவினாலறியப்படும் பலவிடயங்கள் அவனுடைய நினைவுக்குத் தோன்றிய பொய்த்தோற்றங்களென்றும், கட்புலனாகும் பொருளொவ்வொன்றும் அநித்தியமென்றும், மற்றுமெல்லாம் மித்தையென்றுங் கூறுவது வேதாந்த சாத்திரத்தின் கொள்கையாகக் காணப்படவில்லை. அக்கொள்கையைத் தழுவிய விஷயமொன்றைக்கூட வியாசசூத்திரத்திலாவது அல்லது சங்கர பாஷியத்திலாவது யான்குறிப்பிட்டதில்லை. ஆனால் அவ்விஷயம் மற்றைய பாஷியங்களிலும், அஃது ஆதிவேதாந்தின் கொள்கையன்றென்று யான் உறுதியாய்க் கூறுகின்றேன். ஆனால் பின் வந்தார் அதை வேறு சாத்திரத்தினின்றுமெடுத்து வேதாந்த சாத்திரத்துள் நுழைத்து அவ்விரண்டு சாத்திரங்களையும் குழப்பிவிட்டார்கள்," என்று ஸ்ரீமான் கோல்புருக் 182—ம் வருடத்தில் இராயல் ஏஷியாடிக் சங்கத்தில் வாசித்த வேதாந்த வியாசத்திற் கூறியுள்ளார். மாயாவாதக் கொள்கையைத் தழுவிய விஷயம் யாதொன்றும் சங்கரபாஷியத்திற் காணப்படவில்லை யென்று ஸ்ரீமான் கோல்புருக் கூறியது தவறானவிஷயம். ஆனால் வேதாந்த நூல்களாகிய வேதங்களும், பழைய உபநிடதங்களும், வேதாந்த சூத்திரமும் மாயாவாதக் கொள்கையைக் கொஞ்சமேனும் குறிப்பாகக் கூறவில்லையென்று அவர் கூறினதுண்மையே. மற்று அந்நூல்கள் பிரபஞ்சத்தின் நித்தியத்தையே

உணர்த்துகின்றனவென்று நாம்ஸ்தாபிக்கக்கூடும். பௌத்தசமயவாசனை யேற்றத்தனுல் சௌபாதர் உபதேசங்களையனுசரித்து மாயாவாதக்கொள் கையை வேதாந்தசாத்திரத்துள்நுழைத்தது ஸ்ரீசங்கராசாரியசுவாமிகளே. பின்தோன்றிய சங்கர வேதாந்தத்துக்கு மாயாவாதக்கொள்கை யின்றி யமையாததொன்று. ஆனால் பழைய சுத்தாத்துவிதக் கொள்கையையுடைய வேதங்களுக்கும் பழைய உபநிடதங்களுக்கும் அக்கொள்கை புறம்பே. வேதாந்தத்துக்கும் மாயைக்குமுள்ள சம்பந்தத்தைக் குறித்தவாதம் இக் காலத்துக்கே உரியதன்று. இந்தியநாட்டில் விளங்கிய முற்காலத்துத் தத்துவஞானிகள் கூட இம்மாயாவாதக் கொள்கை உண்மையோ வென்று சந்தேகித்தார்கள். விஞ்ஞானபிக்ஷு என்பவர் மாயாவாதம் பௌத்த சமயத்தின் அந்தரங்கக்கொள்கை யென்று கூறுமொரு பாகத்தைத் தனக் குடன்பாடாகப் பத்மபுராணத்திலிருந் தெடுத்துக்காட்டுகிறார். "தேவி! வேதவாக்கியங்களுக்குப் பலராலுங் கண்டிக்கப்படும் விபரீதார்த்தங்களைக் கொடுப்பதும், கிரியாமார்க்கத்தை யொழித்து நிவர்த்தி மார்க்கத்தையே போதிப்பதும், பௌத்தசமயத்தின் அந்தரங்கக் கொள்கையுமாகிய பொய் மாயாவாதக் கொள்கையை, நானே ஓர்பிரமத்தினுருவைத் தாங்கிக் கலியுக த்தில் கூறினேன்." என்று பரமேஸ்வரன் தன் மனைவியாராகிய பார்வதி யம்மையாருக்குக் கூறினதாகப் பத்மபுராணங் கூறுகின்றது. (மூயிர். 'சமஸ்கிரதநூல்கள்' வாலம் 3 பக்கம் 202.) இங்ஙனம் ஒருசாரார் வேதாந் தத்துக்கு மாயாவாதக்கொள்கை இன்றியமையாத தொன்றென்றும், மற் றொருசாரார் தற்செயலாய் இடையிலே சேர்ந்ததொன்றென்றுங் கருது கிறார்கள். வேதாந்தத்துக்கும் மாயைக்கும் சம்பந்தமென்னை யென்னும் வினாவைவிடுப்பதே இவ்வியாசத்திற் போந்தகருத்து.

வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களும், பிரமசூத்திரமும், பகவத் கீதையுமே வேதாந்த சாத்திரநூல்களாகும். பின்னிரண்டுநூல்களும் உப நிடதங்களின் சுருக்கங்களாகும் உபநிடதங்களோ வேதங்கள் காரணமா யெழுந்தவை. ஆதலினால் வேதங்களிலும் உபநிடதங்களிலுமுள்ள தத்துவக் கொள்கைகளைச் சுருக்கமாயெடுத்துக்கூறி அவைகள் மாயாவாதக் கொள் கையைக் கொஞ்சமேனுந் தழுவுகின்றனவோ வென்றாராய்வதே நம் முடைய கடமையாகும்.

சாத்திரத்துக்கு மூலம் அதிசயமென்பது பலராலு மாளப்பட்டதோர் வசனம். பல்வகை நிகழ்ச்சிகளோடு கூடிய இவ்வுலகத்தின் விசித்திர அமைப்பு ஆராயுமறிவுடையார் மனதுக்கோர் எழுச்சியை யுண்டாக்குகின்றது. செந்நிறப் பசுவினின்று வெண்ணிறப்பால் எங்ஙனம் வருகின்றது? சூரியன் தன்னிலை வழாமல் எங்ஙனம் நிற்கின்றான்? "தாங்குதலொன்றின்றியும், கட்டின்றியும், தன்னிலையினின்றுந் தாழாமல் அஃதெங்ஙனங்கீழ் நோக்கிச் சுற்றிவருகின்றது." (இருக்குவேதம் IV. 13, 5.) ஸ்ரீமான், ஹேகலின் கொள்கை பிரகாரம், சாத்திரமென்பது பதார்த்தங்களின் விசாரணையே, ஆராய்ச்சியினால் பதார்த்தத்தின் நியாயத்தையும், அதன் சிறப்பிலக்கணங்களையும், அதன் சாதித்தன்மையும், சுருங்கச்சொல்லின், அதன் விவரமெல்லா மறிகின்றோம். பிரதியக்ஷானுபவங்களின் காரணங்களை அறியவேண்டிய ஓர் அவாவினால் வேதசாத்திர முண்டாயிற்று. வாழ்க்கையின் பொதுத்தர்மமாகும் மாறுபாடு பலவற்றிற்கு தோன்றாக் காரணமாயிருக்கும் நித்தியமாய் வொன்றையறியத் தத்துவஞானம் மக்களைத் தூண்டாநின்றது. எப்பொருள்களும் அழிவையடைகின்றன. பின் எஞ்சிநிற்பதெது? யாதேனு மொன்றுண்டோ வில்லையோ? வேதந்தோன்றிய காலத்திலிருந்தோர் இத்தகைய சாத்திரக் கேள்வியை யெழுப்பிக்கொண்டு அதற்கு விடையையும் பகந்தனர். அக்காலத்திலேதான் முதல் முதல் இப்பிரதியக்ஷ வுலகத்தைக் குறித்து விசாரணை உண்டாயிற்று. தமக்குத்தோன்றிய சமயஉணர்ச்சிகளை வெளியிடக் கஷ்டப்பட்ட அறிவுமுதிரா மக்களால் வேதங்கள் உண்டாக்கப்பட்டன வென்பதைநாம் நன்கு அறியவேண்டும். நமக்கு அவைகள் சாத்திரங்களாகக் காணப்படவில்லை. காரிய வேதுவைக்கொண்டு வேதகிரந்த கர்த்தாக்கள் இயற்கை நிகழ்ச்சிகளுக்குக் காரணம் தேவர்களென்று தீர்மானித்தார்கள். சூரியன் ஏன் ஒவ்வொரு காலையிலுதயமாக வேண்டும்? சந்திரன் ஏன் ஒவ்வொரு மாலையிலுதயமாக வேண்டும்? அவைகளை யியக்கிக்கொண்டிருக்குந் தேவதாசக்திகளன்றி அங்ஙனமுண்டாவதற்குக் காரணம்மற்றென்னை? சோமசூரியதேவர்களுண்டாயினது இங்ஙனமே. பண்டைக்காலத்து இந்திரியர்கள் மேகத்திலொரு தேவதை வீற்றிருப்பதைக் கண்டார்கள். வாயுவிலொரு தேவதை பேசு

வதைக்கேட்டார்கள். இயற்கையுலகம் ஒரு தேவலோகமாயிற்று. 'நிலம் நீர் நெருப்புயிர் நீள்விசும்பின்' பூதசக்திகளே சிறு தேவதைகளாயின. இவைகளுக்கதீதமாய் ஓர் பரம்பொரு ளுண்டென்னுங் குறிப்புகள் வேதங் களிற்காணப்படினும், அந்நூல்களின் பொதுக் கொள்கை கடவுளர் பல ரென்பதே. அக்குறிப்புகளு மருகியிருத்தலின், கடவுளர் பலரென்னும் பொய்க் கொள்கையையுடைய மக்களை உயர்த்துவதற்கு அவைகள் போதி யவைகளல்லன. உபநிடதங்களெல்லாம், வேதங்கள் குறிப்பாகக் கூறு மத்துவிதத்தையே வற்புறுத்துகின்றன. இவ்விடயத்தை நாம் பின்னர் அறியப்போகின்றோம்.

வேதந் தோன்றிய காலத்து முழுமுதற் பிரபஞ்சம் நித்தியமாகவே கருதப்பட்டது. அக்காலத்துத் தத்துவஞானிகள் அதன் உற்பத்திக்குக் காரண மென்னை யென்பதை மட்டு மாராய்ந்தார்கள். புலப்படாதிருக் கும் முதற்காரணங்களை மற்றவைகளினின்றும் பிரித்தெடுப்பதே அவர் களுக்குச் சாத்திரமாகத் தோன்றிற்று. நித்தியவஸ்துவி னுண்மைத் தத் துவத்தையறிய வேண்டிய அவா, பல்வகைத்தாய பொருள்களுக்குக் கர்த் தாக்கள் பலரென்னுங் கொள்கையை ஸ்தாபிக்க அவர்களைத் தூண்டிற்று. ஆனல் பிரபஞ்சத்தின் மித்தைத்தன்மையை யுணர்த்துங் குறிப்பு யாதொ ன்றும் வேதங்களிற் காணப்படவில்லை. ஒருவகையாய் இந்த விருடிகள் நித்தியமாயவஸ்து அனுபவாதீதமாய தொன்றென்று கருதாமல், இப்பிரதி யக்ஷவுலகமே யென்றறிந்தார்கள்.

(இன்னும் வரும்.)

**எஸ், இராதாகிருஷ்ண ஐயர், எம். ஏ., எல். டி.**
தத்துவ போதகாசிரியர்
பிரஸிடென்ஸி காலேஜ்
சென்னை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவசமயமும் சைவத்தலைவர்களின் கடமையும்.

## தொகுதி 5. பக்கம் 128. தொடர்ச்சி.

“சைவநூல்களில் கூறப்பட்டதும், பாசமூன்றையும் தவிர்ப்பதும் மேலானதுமாகிய தீக்ஷையைத் தவிர வேறுயாதொரு ஆசிரமும் இவ்வுலகத்தில் மாந்தர்க்கு மேன்மையன்று. தீக்ஷையினாற்றான் மோக்ஷம். ஆசிரமங்களினாலும் மோக்ஷமில்லை. மன அழுக்கு நீங்கப்பெற்று அத்துவசுத்தியடைந்தாலொழிய மோக்ஷத்துக்கு வழிகிடையாது. ஆதலின் மனச்சுத்தமுண்டாக்கும் தீக்ஷையின்றி முத்தியடைய விரும்பும் மனிதர் கோலின்றி நடக்கவிரும்பிய குருடர்போல்வர். தோணியின்றிக் கடலைக்கடக்கத் தொடங்கியது போலாம்.” இச்சிவதீக்ஷையை ஆரியப் பிராமணர் உள்ளிட்ட எவ்வருணத்தார்க்கும் செய்துவைக்க அதிகார முடையவர்கள் தற்காலம் ஆதிசைவரென்றும் பட்டரென்றும் அழைக்கப்படும் சைவாசாரியார்களே. இவர்கள் தாம் தமிழ்நாட்டில் பூர்வீகமாயுள்ள திராவிடக் குருக்கள்களே. சிவாலயங்களின் பிரதிஷ்டை உற்சவம், பிராயச்சித்தம், அர்ச்சனை முதலிய எவ்விதக்கிரியைகளும் சிவதீக்ஷை முதலிய உபதேசங்களும் செய்துவைக்க அதிகாரமுடையவரென சிவாகமங்களிற் கட்டளை யிடப்பட்டிருக்கிறது. அதற்கு மாறாகச்செய்யப்படும் பிரதிஷ்டை, கும்பாபிஷேகம் முதலிய கிரியைகளியாவும் சைவக்கிரியைகள் ஆகமாட்டா. சைவாசாரியர்க்கே யுரித்தாயுள்ள சிவாலயப்பிரதிஷ்டை, அர்ச்சனை, கும்பாபிஷேகம் முதலிய கிரியைகளை அவர் நீங்கலாக, அந்நியசாதியார் செய்யப்புகின் கேட்டை உண்டுபண்ணுமென்பதே சிவாகமங்களின் கருத்தாம். இதனை,

"பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றன்னை அர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டிற்குப் பஞ்சமுமா மென்றே
சீர்கொண்ட நந்திதெளிந் துரைத்தானே." என்ற திருமூலர்

திருமந்திரத்தானுமறிக. மேற்சொன்ன சிவாகமங்களின் கருத்தை யநுசரித்தே சிவாலயங்களின் மூலஸ்தானத்துக் கருகில் ஆரியப் பிராமணர் போகக்கூடாதென்ற வழக்கம் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது. சிவாலயங்களின் கர்ப்பக்கிரகம் மத்தியமண்டபம் மூலஸ்தானம் இவற்றுள் பிரவேசிக்க ஆதிசைவர் ஒருவருக்கே அதிகாரமுண்டு. ஆதிசைவரைத்தவிர ஆரியப்பிராமணர் முதலிய யாவர் பிரவேசித்தாலும் மற்று ஏனைய கீழ்ச் சாதிகளை யொப்பவே பிராயச்சித்தம் முதலிய பரிகாரங்கள் அக்கோயில்களில் செய்யப்பட வேண்டுமென சிவாகமங்கள் விதிக்கின்றன. தற்காலம் ஸ்மார்த்தர்களுட்சிலர் தங்களைத் திராவிடசைவக்குருக்கள்களிலும் உயர்ந்தவரெனச் சொல்லிக்கொள்ளுதல் உண்மையாயிருந்தால் அச்சிவாசாரியரால் பூஜிக்கப்படும் கோயில்களுக்கு இந்த ஸ்மார்த்தர்கள் போதலும், அவர் சிவதரிசனஞ் செய்துவைக்கத் தரிசித்தலும் அவரிடமிருந்து விபூதி பிரசாதம் முதலியன பெறுதலும் கூடாவொழுக்கமன்றோ? அங்ஙன சிவாலயங்களின் புறவாயில்களில் காத்திருந்து திராவிடக் குருக்கள்களால் கொடுக்கப்படும் பிரசாதங்களை ஆவலுடன் பெற்றுப் போகும் இந்த ஸ்மார்த்தர்கள் தங்களை அவர்களினும் மேலெனச் சொல்லிக் கொள்ளுதல் எங்ஙனம் பொருந்தும். சிவாலயங்களில் எவ்விதமான கிரியைகளும் நடத்த சைவாசாரியரே உரிமையுடையவராதல்போல், சைவர்கள் கிரகங்களிலும் எவ்விதமான கிரியைகளும் செய்துவைக்க சைவாசாரியர்களே அதிகாரமுடையவர்கள். அவ்வாறாகவும் சிவதீக்ஷை கூட இல்லாத ஸ்மார்த்தர் அநேகர் இக்காலத்தில் விபூதிருத்திராக்ஷங்களைத் தரித்துக்கொண்டு சைவ ஆசாரியர் போலப் பாவனைசெய்து திரிகின்றனர். இவர்கள் இச்சைவ வேஷங்களைத் தாங்கிய வயிறுவளர்க்கவேயன்றி வேறல்ல. இவர்களின் வஞ்சகச்செயல்களை யறியமாட்டாத சாமான்ய ஜனங்கள் இவர்களையே சைவாசாரியரென மயங்குகின்றனர். சிவதீக்ஷைகூடஇல்லாத இப்பிராமணர்கள் சைவகிரகங்களில் சைவக்கிரியைகள் செய்யமுயல்வது குருடனுக்குக் குருடன்வழிகாட்டல்போலாம். இவர்களைக்கொண்டு, சைவர்கள் வைதிகக்கிரியைகள்செய்துகொள்வது சிவாகமத்துக்கு முற்றிலும் விரோதமாகையால் அவைகள் ஒருவிதப்பயனையும் தரமாட்டா. கிருஸ்தவர்களையும் மகம்மதியர்களையுங்

கொண்டு சிவகிரியைகள் செய்வதையே ஒக்கும். இவ்வுண்மைகளைச் சிறிதும் நோக்காது, தற்காலம் சைவசமயிகளுட்பலர் ஆதிசைவர் முதலிய சைவர்களை அவமதித்துத் தள்ளிவிட்டு, அதீக்ஷிதர்களாய், அசைவர்களாய் சிவாகமதமிழ்வேத நிந்தகர்களாய், அந்நியமதஸ்தர்களா யுள்ள ஸ்மார்த்தர்களை, சிரார்த்தம் விவாகமுதலிய கருமங்களுக்குச் சற்பாத்திரரென மதித்து அவர்களுக்கு அன்னதானம் முதலியன செய்தல் புண்ணியமென மயங்குகின்றனர்.

"வைதிகப்பிராமணர் ஆயிரம்பேருக்கு அன்னதானஞ் செய்தபலனும் சமயதீக்ஷைபெற்ற ஒருசைவருக்கு அன்னதானஞ் செய்தபலனும் ஒக்கும். வைதிகப்பிராமணர் பதினாயிரம் பேருக்கு அன்னதானஞ் செய்த பலனும் விசேடதீக்ஷைபெற்ற ஒருவருக்கு அன்னதானஞ் செய்த பலனும் ஒக்கும். வைதிகப்பிராமணர் லக்ஷம்பேருக்கு அன்னதானஞ்செய்தபலனும் நிர்வாண தீக்ஷைபெற்ற ஒருவருக்கு அன்னதானஞ் செய்தபலனும் ஒக்கும். வைதிகப் பிராமணர் கோடிபேருக்கு அன்னதானஞ்செய்த பலனும் சைவாசாரியர் ஒருவருக்கு அன்னதானஞ்செய்த பலனும் ஒக்கும். வேதாந்த மகா வாக்கியத்தையறிந்த கோடி பிராமண சன்னியாசிகள் கூடினும், நிர்வாண தீக்ஷை பெற்று, சித்தாந்த நூல்களாகிய சிவஞானநூல்களை யோதி, பதி பசு பாச மென்னும் திரிபதார்த்தத்தின் லட்சணங்களை யறிந்த ஒரு சைவருக்குச் சமமாகார்கள்" இது சிவவாக்கிய சிவாகமநூற் றுணிபு. அன்றியும் சிவாகமத்தின்படி ஒழுகி, தமிழ்வேதத்தைத் தென்னாடெங்கும் பரவச் செய்து, சைவசமயத்தை ஸ்சாபித்து, சிவமாந்தன்மைப்பேறும் பெற்றவர்கள் அறுபத்துமூன்று நாயன்மார்கள். இவ்வுண்மை, நாயன்மார்களின் சரித்திரஞ்செய்தருளிய தெய்வச் சேக்கிழார் என்ற வேளாளரை அநபாய சோழமகாராஜா, யானைமீதேற்றித் தாமே வெண்சாமரம் வீசி நகர்வலஞ் செய்வித்தபொழுது தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவரும் வேதபாராயணஞ்செய்துகொண்டு வந்தார்களென்று, அத்தில்லைவாழ் அந்தணரில் ஒருவராகிய உமாபதிசிவாசாரியார் தமது சேக்கிழார் புராணத்தில் கூறியிருக்கின்றார். அங்ஙனமாகவும் இக்காலத்தில் ஸ்மார்த்த பிராமணருட்பலர் இவ்வறுபத்துமூன்று நாயன்மார்களை வழிபடக்கூசுகின்றனர். அவர்கள் உற்சவங்களில் வேதபாராயணஞ் செய்யாது மறுக்கின்றனர். அவர்கள் அருமை பெருமைகளைச் சிறிதுஞ்சிந்தியாது அவர்களை வேண்டியவாறே நிந்திக்கின்றனர். உலகமுய்யும்படி அவர்கள் அருளிய தமிழ்வேதங்களை அவமதிக்கின்றனர். இது எவ்வளவு அதிபாதகம்! விபூதிருத்திராக்ஷங்களைத் தரித்துக்

கொண்டு அச்சின்னங்களுக்குரிய சிவபெருமானோடு பசுக்களை (ஆன்மாக் களை) சமமெனக்கூறியும், சிவவாக்கிய சிவாகமங்களை நிந்தித்தும், அச்சிவ பெருமானுக்குத் துரோகிகளாய் ஒழுகும் இவர்கள் மற்றெப்பாதகந்தான் செய்யக்கூசுவார்கள்.

ஐயையோ! இச்சிவத்துரோகிகளை நம்சைவசமயிகள் வணங்குதலும் இவர்களிடத்தே புசித்தலும் இவர்களை விவாகம் சிரார்த்த முதலிய தான கருமங்களில் சற்பாத்திரமென வரித்துப் பூஜித்தலும் எவ்வளவு பெருங் கொடும்பாவம். சைவசமயிகளே! நீங்கள் பெறும்சமயம் விசேடம் முத லிய தீக்ஷைகளும் நீங்கள் அனுஷ்டிக்கும் சந்தியாவந்தனம் சிவபூஜை முத லிய கிரியைகளும் உங்களுள் இறந்தவர் பொருட்டுச் 'செய்யப்படும் அந்தி யேஷ்டி முதலிய கிரியைகளும், நீங்கள்சேவிக்கும் தேவாலயங்களில் செய் யப்படும் பிரதிஷ்டை உற்சவம் பிராயச்சித்தம் முதலிய சகலவிஷயமான கிரியைகளும் விதித்தநூல்கள் சிவாகமங்களே. இச்சிவாகமங்களின் உயர் வையும் அவற்றில் விதிக்கப்பட்ட சிவதீக்ஷை சைவானுஷ்டானம் முதலி யவற்றின் மேன்மையையும் சிவமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாட்சரத்தின் மகி மையுமே சகல வேதாகம புராணங்களிலும் பேசும்

இவ்வுண்மைகளையுணராது, இச்சிவாகமங்களையும், அவற்றின்படி ஒழுகிச் சிவமாந்தன்மைப் பேறுபெற்ற உண்மைநாயன்மார்களையும், அவர் கள் உலகமுய்யும்படி அருளிய தமிழ்வேதங்களையும் நிந்திக்கும் ஸ்மார்த்தர் களை, அச்சிவாகமங்களை உண்மை நூலெனக்கொண்டு அவற்றின்படி ஒழு கப் புகுந்த நீங்கள் யாவர்களாகக் கருதியொழுகல் வேண்டும்?

உலகத்துட் சாதிபேதம்போல, சற்சமயமாகியசைவசமயத்தினும் சம யநடைபற்றி முதற்சாதி, இரண்டாஞ்சாதி, மூன்றாஞ்சாதி, நான்காஞ்சாதி, நீச்சச்சாதியென ஐந்து சாதிகள் கொள்ளப்படும். சிவாகமத்தில் விதிக்கப் கப்பட்ட நான்கு பாதமுறைப்படி வழுவாது நடந்து சிவானந்தப் பெரும் பேறு பெற்ற சிவஞானிகளே முதற்சாதி, சிவயோகிகள் இரண்டாஞ்சாதி, சிவகிரியையாளர் மூன்றாஞ்சாதி, சிவசரியையாளர் நான்காஞ்சாதி, இந்நெறி களிலுள்ளவர்களையும் அவர்கள் சாஸ்திரமுதலிய வற்றையும் நித்திப்பவர் கள் சதாசூதகிகளாகிய பஞ்சமசாதி (தொடுதற் குரிய அருகரல்லாத நீச் சச்சாதி யெனப்படுவர்.)

## சமயப்பிரவேசம்.

சைவாசாரியரை அடைந்து, சமயதீக்ஷை பெற்றுச் சமயப்பிர வேசம் செய்துகொண்டாலொழிய ஒருவன் சைவனாக முடியாது. சமய

தீக்ஷைபெருதவன் எச்சாதியைச் சேர்ந்தவனுயிருந்தாலுஞ் சரி, சமயத்தில் அசைவனுகவே கருதப்படுவான். சூதசங்கிதை முதலிய நூல்களில் சைவர்கள் தமது சமய ஆசாரங்களில் பிறழாமலிருக்கவேண்டுமெனவும், அந்நிய சமயர் ஆசாரங்களை அனுசரிக்கக்கூடாதெனவும், அனுசரிப்பவர்களைத்தொடவுஞ் செய்தல் கூடாதெனவும் கூறியிருக்கிறது. சுத்த சைவ சமயமானது கேடுறுதிருந்த காலத்தே பிளவுபட்டுப்போன வீரசைவர்கள் இன்றைக்கும் ஆரியப்பிராமணர் முதலிய அசைவர்களை மேற்கண்ட விதமே நடத்தி வருகின்றனர். சைவமயத்தை மெய்யெனக் கருதுகின்றவர்கள் சைவாகமங்களை ஆராய்ந்தறிந்து அதன் வழி நின்ருலன்றி அதன் உடையார்களெனப்படுதலும் அதனுற் பெறப்படும்பயனும் இல்லையாம்.

சைவசமயிகளே! நீங்கள் இவ்வுண்மைகள் யாவற்றையும் நன்ருக வாராய்ந்து சிவாகமவிதிப்படி பத்தி செய்து ஒழுகக்கடவீர்கள். இவ்வுண்மை நிலைக்கு மறுதலைப்பட்டவர்களைக் கண்டால் அவர்கள் பொருட்டு இரங்கி அவர்களுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தக் கடவீர்கள்.

இனிச்சிவாலயங்களையும் சிவதருமங்களையும் போற்றும் சுதந்திரமும் உரிமையுமுடையவர் யாவரென்பதைச் சற்று ஆராய்வாம்.

சிவாலயங்களில் "எக்கோயில் எவ்வாகமத்தின் முறைபடி கட்டப்பட்டது அக்கோயில் அவ்வாகமத்தின் முறையே பூசைவிழா நடத்துக, மாறிச் செய்யிற் குற்றமாம்" எனக்கட்டளை யிடப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவிலுள்ள சிவாலயங்கள் யாவும் சைவஆகமிகளால் கட்டப்பட்டன. இவ்வாலயங்களிற் கொடிஸ்தம்பம், பலிபீடம், கட்டிடவமைப்பு முதலிய யாவும் சிவாகமங்களில் விதித்த பிரகாரமே நிருமிக்கப்பட்டிருக்கின்றன. இஃதொன்றே இக்கோயில்கள் யாவும் ஆகமிகளாற் கட்டப்பட்டு ஆகமிகளுக்கே சுதந்தரமாயுள்ள தென்பதை எக்காலத்தும் நிலைநிறுத்தும் சாக்ஷியாயுள்ளது. இவ்வாலயங்களில் பூஜை நைமித்தியம் முதலிய நித்தியகிரியைகளும் பிரதிஷ்டை உற்சவம் முதலிய சகலகருமங்களும் சிவாகமங்களில் விதித்தபடியே இன்றைக்கும் நடைபெறுகின்றன.

இன்னும் வரும்

C. சங்கரராயர் B. A.

---